# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்


பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா.ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபுபு | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 95 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு

பா.பௌத்ரா தேவி,
பகுதி நேர ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

## முன்னுரை

இக்காலத் தமிழ் இலக்கிய வகைகளுள் சிறுகதையும் ஒன்று தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் புதுமைப்பித்தன். தமிழ்ச் சிறுகதை உலகம் அவர் காலத்திற்கு முன்பு கண்டிராத கதைப் பாத்திரங்களைப் படைத்ததன் மூலம் பாரதியாருக்குப் பின் தமிழ் இலக்கிய உலகில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தவர் புதுமைப்பித்தன். அவர் கதைகளின் கதைப் பொருள்கள் விரிவானவை விறுவிறுப்புக் கொண்டவை நுட்பமும் ஆழமும் கொண்டவை. இக்கட்டுரை அவற்றில் பொன்னகரம் குறித்த சிறுகதையினை ஆய்வதாக அமைகின்றது.

## புதுமைப்பித்தன் சிறுகதைகள்

புதுமைப்பித்தன் 1933 முதல் 1946 வரையிலான 12 ஆண்டுகளே எழுத்துப் பணியில் இருந்தார் வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் உள்ளவர்களைப் பற்றி மட்டுமே இலக்கியம் எழுத வேண்டும் என்று அதுவரை இருந்து வந்த நிலைமையை மாற்றித் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களையும் தம் கதைகளில் படைத்துக் காட்டியுள்ளார். மேலும் அவர் மக்களிடமிருந்து தூரமாக விலகி நின்று கதை சொல்லாமல் மக்களோடு ஒட்டி நின்றே தம் கதைகளைப் படைத்துள்ளார்.

புதுமைப்பித்தன் 98 கதைகளை எழுதியுள்ளார். அவர் மணிக்கொடியில் எழுதிய 29 கதைகளைப் புதுமைப்பித்தன் கதைகள் என்ற பெயரில் நவயுகப் பிரசுராலயம் வெளியிட்டுள்ளது. ஆறுகதைகள், நாசகாரக் கும்பல், பக்த குசலோ என்ற அவரது பிற நூல்களையும் அதே நிறுவனம் வெளியிட்டுள்ளது. கலைமகள் பதிப்பகம் காஞ்சனை தொகுதியையும் ஸ்டார் பிரசுரம் ஆண்மை என்ற தொகுதியையும், வெளியிட்டன. ஐந்திணைப் பதிப்பகம் புதுமைப்பித்தனின் மொத்தச் சிறுகதைகளையும் வெளியிட்டது. அண்மையில் காலச்சுவடு பதிப்பகம் புதுமைப்பித்தனின் அனைத்துச் சிறுகதைகளையும் வெளியிட்டுள்ளது.

**கதைக் கரு**

புதுமைப்பித்தன் காதல், சாவு, வறுமை, காமம், சிறுமை, சீரழிவு, சோகம், குழப்பம், கொந்தளிப்பு, மந்திரம், பசி, பயம், என்று பலவற்றைக் கதைக் கருவாக எடுத்துக் கொண்டுள்ளார். புராணம் எடுத்தாண்ட கதை கருக்களை அடிப்படையாகக் கொண்டது. அவர்

- தனிமனித உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட கதைகள்
- தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள்
- சமுதாயச் சிக்கலை மையமிட்ட கதைகள்
- காதலைக் கருவாகக் கொண்டவை
- வறுமையைக் கருவாகக் கொண்டவை

**பொன்னகரத்தின் கதைக் கரு**

புதுமைப்பித்தன் கதைகளில் "கற்பு" என்ற கருத்தாக்கத்தைப் பேசும் பொன்னகரத்தில் வாழ்பவர்கள் வறுமையின் பிடியில் சிக்கத் தலிப்பவர்கள் அது வேறு உலகம் ஐயா அதன் தர்மமும் வேறு என்று அந்நகரை விவரிக்கும் புதுமைப்பித்தன் சொந்தமாகக் குதிரை வண்டி வைத்திருக்கும் முருகேசனின் தாயார் தம்பி, குதிரை ஆக ஐவர் உள்ள ஏழ்மைக் குடும்பத்தை அக்கதையில் காட்டியுள்ளார்.

இக்கதையில் தன் கணவனுக்கு பால் வாங்க தன் கற்பை கொண்டு முக்கால் ரூபாய் சம்பாதித்து பால் வாங்குகிறாள்.

"என்னவோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இது தான் ஐயா பொன்னகரம்" என்று கதையை முடித்துள்ளார் புதுமைப்பித்தன்.

**வறுமை**

மனிதன் வயிற்றுப்பாட்டுக்கு நடத்தும் போராட்டங்களை அப்படியே படைத்துக் காட்டுவதில் அவர் வல்லவராகத் திகழ்கின்றார். பொன்னகரம் கதையில்,

"இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால் சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்றால் தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள் சாலையோரமாக முனிசிபல் கங்கை – அல்ல யமுனை தானே கறுப்பாக இருக்கும்? அதுதான் பிறகு ஓர் அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம் மறுபக்கம், வரிசையாக மனிதக் கூடுகள் ஆமாம், வசிப்பதற்குத்தான்.

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன, சாதாரண எண்ணெய் விளக்கு என்று வறுமையில் வாடுபவர்களின் இருப்பிடத்தை வர்ணிக்கின்றார். மேலும் அவ்விடத்தில் உள்ள ஆரோக்கியக் குறைபாடுகளை "ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது பாக்டீரியா விஷக்கிருமிகள் காலரா வியாதி அங்கிருந்துதானே உற்பத்தி

செய்யப்படுகின்றன. எப்படியாவது உயிர்வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும்" – என்று வறுமையாளர்களின் வாழிடத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

**முடிவுரை**

புதுமைப்பித்தன் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஒரு மைல்கல், ஒரு திருப்புமுனை. ஒரு சகாப்தம் எவ்வாறு பாரதி தமிழ்க் கவிதை உலகில் நடை வடிவம் உள்ளடக்கம் முதலியவற்றில் புதியன புகுத்தி இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்குத் தலைமகனாக விளங்கினாரோ அதே போல் தமிழ்க சிறுகதை இலக்கியத்திற்குச் சிறப்பு மிக்க தலைமகனாக விளங்கியவர் புதுமைப்பித்தன். இவரின் பொன்னகரம் என்ற கதையில் வறுமையும், கற்பு பற்றியும் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இதன் மூலம் காணமுடிகின்றது.

❖




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4